ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2380/31 - 2024 අප්‍රේල් මස 19 වැනි සිකුරාදා - 2024.04.19

*2380/31 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டம்***

*3 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

திருத்தப்பட்டவாறான 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ், எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்டு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சராகிய பிரசன்ன ரணதுங்க ஆகிய நான், இதற்கான அட்டவணையின் I ஆம் நிரலில் குறித்துரைக்கப்பட்ட பகுதியையும் அத்தகைய அட்டவணையின் II ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவில் காட்டப்பட்டுள்ள எல்லைகளின் வரையறைகளைக் கொண்டதுமான இப்பகுதியை அபிவிருத்திக்குப் பொருத்தமானதென அபிப்பிராயப்படுவதனால், அத்தகைய பகுதிகளை நகர அபிவிருத்திப் பகுதிகளாக இக்கட்டளை மூலம் பிரகடனப்படுத்துகின்றேன்.

**பிரசன்ன ரணதுங்க** (பா. உ.),
நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு,
12 ஆவது மாடி,
"செத்சிறிபாய", கட்டம்-II,
பத்தரமுல்லை,
2024, ஏப்பிறல் 04.

1A – G 41787 – 49 (2024/04)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

ஹங்குரன்கெத நகர அபிவிருத்தி அதிகாரப் பிரதேசம்

*நிரல் I*

*மத்திய மாகாணத்தின், நுவரெலியா மாவட்ட, ஹங்குரன்கெத பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தின் உள் அமைந்துள்ள ஹங்குரன்கெத பிரதேச செயலாளர் பிரிவிற்குச் சொந்தமான இலக்கம் 494 தமுனுமெய, இலக்கம் 495 ஹங்குரன்கெத, இலக்கம் 494E தமுனுமெய வடக்கு, இலக்கம் 495D, தெல்கஹபிட்டிய, இலக்கம் 496B அரன்தன, இலக்கம் 492C வழலவெல, இலக்கம் 493 மாதன்வெல மற்றும் இலக்கம் 495C பல்லேமலுவ ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளும் இலக்கம் 495A புஸ்ஸலமங்கட, இலக்கம் 492 தியஉடகம, இலக்கம் 493A கொட்டல மற்றும் இலக்கம் 495B யடிஹகுரன்கெத ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளையும் உள்ளடக்கிய இங்கு நிரல் II இல் விபரிக்கப்படும் அதன் எல்லைகளும் குறியீடுகளினையும் கொண்டமைந்து சூழப்பட்ட முழுப் பிரதேசத்தினை உள்ளடக்கியதாகும்.*

*நிரல் II*

**வடக்கு:**

*இலக்கம் 495D தெல்கஹபிட்டிய கிராம அலுவலர் பிரிவின் வடக்கு எல்லை மற்றும் இலக்கம் 495A புஸ்ஸல்லமங்கட கிராம அலுவலர் பிரிவின் தென்கிழக்கு நீண்ட எல்லையைச் சந்திக்கும் ஜோர்ஜ் அபேகுணசேக்கர மாவத்தையின் மத்திய கோட்டினை ஆரம்பப் புள்ளியாகக் கொண்டு (01), அந்த இடத்தில் இருந்து இலக்கம் 495D தெல்காபிட்டிய கிராம அலுவலர் பிரிவின் வடக்குத் திசையின் ஊடாக தென்கிழக்குத் திசையை நோக்கிப் பயணித்து அந்த இடத்தில் இருந்து சந்திக்கும் ஹங்குரன்கெத்த அதிகாரிகம வீதியின் மத்திய கோட்டின் ஊடாக தென்கிழக்குத் திசையை நோக்கிப் பயணித்து* **(02) இலக்கம் 495 ஹங்குரன்கெத்த கிராம அலுவலர் பிரிவின் வடக்கு எல்லையினைச் சந்திக்கும் புள்ளிவரை, (03) அந்த இடத்தில் இருந்து அந்த கிராம அலுவலர் பிரிவின் எல்லையின் ஊடாக தெற்கு, தென்மேற்குத் திசையினை நோக்கிப் பயணித்து இலக்கம் 494A கொட்டல கிராம அலுவலர் பிரிவின் வடக்கு எல்லையினைச் சந்திக்கும் புள்ளிவரை (04).**

**கிழக்கு:**

*கடைசியாகக் குறிப்பிட்ட புள்ளியிலிருந்து இலக்கம் 493A கொட்டல கிராம அலுவலர் பிரிவின் வடக்கு வடகிழக்கு எல்லையின் ஊடாகப் பயணித்து அந்த இடத்தில் இருந்து கொட்டவல வீதியின் மத்திய கோட்டின் ஊடாகத் தெற்கு, தென்மேற்கு, தென்கிழக்கு திசைக்குப் பயணித்து இலக்கம் 492 தியவுடகம கிராம அலுவலர் பிரிவின் வடகிழக்கு எல்லையினைச் சந்திக்கும் புள்ளிவரை, (05) அந்த இடத்தில் இருந்து சந்திக்கும் வலுகம வீதியின் மத்திய கோட்டின் ஊடாக தெற்கு, கிழக்கு, தென்கிழக்கு மற்றும் தென்மேற்குத் திசையினை நோக்கி வரையப்படும் கோட்டின் ஊடாக பணித்து இலக்கம் 492C வழலவெல கிராம அலுவலர் பிரிவின் தென்கிழக்கு எல்லையினைச் சந்திக்கும் புள்ளிவரை, (06) அந்த இடத்தில் இருந்து லக்கம் 492C வழலவெல கிராம அலுவலர் பிரிவின் தென்கிழக்கு, தெற்கு மேற்கு திசையினை நோக்கி வரையப்படும் கோட்டின் ஊடாகப் பயணித்து தென்னேகும்புர-ரிகில்லகஸ்கட-ராகல பிரதான வீதியினை குறுக்கு வெட்டும் கோட்டின் மத்திய புள்ளியினைச் சந்திக்கும் இடம் வரை (07) அந்த இடத்தில் தொடங்கி இலக்கம் 492C வழலவெல கிராம அலுவலர் பிரிவின் மேற்கு எல்லையின் ஊடாக தென்மேற்கு, வடமேற்கு திசையினை நோக்கி வரையப்படும் கோடானது இலக்கம் 493 மாதன்வெல கிராம அலுவலர் பிரிவின் தெற்கு எல்லையினைச் சந்திக்கும் புள்ளிவரை (08).*

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

*நிரல் I*

*நிரல் II*

**தெற்கு:**

*கடைசியாகக் குறிப்பிட்ட புள்ளியிலிருந்து இலக்கம் 493 மாதன்வெல கிராம அலுவலர் பிரிவின் மேற்கு எல்லையின் ஊடாக வடமேற்கு கிழக்குத் திசையினை நோக்கி வரையப்படும் கோடானது இலக்கம் 494 தமுணுமெய கிராம அலுவலர் பிரிவின் மேற்கு எல்லையினைச் சந்திக்கும் புள்ளிவரை (09).*

**மேற்கு:**

*கடைசியாகக் குறிப்பிட்ட புள்ளியிலிருந்து இலக்கம 494 தமுணுமெய கிராம அலுவலர் பிரிவின் வடமேற்கு, வடகிழக்கு, மேற்குத் திசையினை நோக்கி வரையப்படும் கோடானது இலக்கம் 494*E *தமுணுமெய வடக்கு கிராம அலுவலர் பிரிவின் தெற்கு எல்லையினைச் சந்திக்கும் புள்ளிவரை (10) பயணித்து அந்த இடத்தில் இருந்து அந்தக் கிராம அலுவலர் பிரிவின் மேற்கு எல்லை வடமேற்கு, வடகிழக்கு மேற்குத் திசையினை நோக்கிய நேர்கோட்டின் ஊடாகப் பயணித்து இலக்கம் 496*B *அரன்தன கிராம அலுவலர் பிரிவின் தெற்கு எல்லையினைச் சந்திக்கும் புள்ளிவரை (11) அந்த இடத்தில் தொடங்கி அதன் வடமேற்கு எல்லையின் ஊடாக வடக்கு, மேற்கு, வடகிழக்குத் திசையினை நோக்கிப் பயணித்து இலக்கம் 495*B *யடிஹங்குரன்கெத்த கிராம அலுவலர் பிரிவின் தென்கிழக்கு எல்லையில் திக்கின்ன வீதியைக் குறுக்குவெட்டும் மத்திய புள்ளியில் இருந்து (12) அந்த வீதியின் மத்திய கோட்டின் ஊடாகப் பயணித்து அதன் இலக்கம் 694*A *புஸ்ஸல்ல மங்கட கிராம அலுவலர் பிரிவின் தென்மேற்கு எல்லையினைக் குறுக்குவெட்டும் மத்திய புள்ளிவரை (13) அந்த இடத்தில் தொடங்கி அந்தக் கிராம அலுவலர் பிரிவின் வடமேற்கு, வடகிழக்குத் திசையினை நோக்கிப் பயணித்து ஜோர்ஸ் அபேகுணசேக்கர மாவத்தையின் மத்திய கோட்டின் ஊடாகப் பயணிக்கும்போது சந்திக்கும் ஆரம்ப புள்ளிவரை வரையப்பட்ட கோட்டால் சூழப்பட்ட பிரதேசத்தினை உள்ளடக்கும்.*

EOG *04-0159*

---

***1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டம்***

*3 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*திருத்தப்பட்டவாறான 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ், எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்டு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சராகிய பிரசன்ன ரணதுங்க ஆகிய நான், இதற்கான அட்டவணையின்* I *ஆம் நிரலில் குறித்துரைக்கப்பட்ட பகுதியையும் அத்தகைய அட்டவணையின்* II *ஆம்*

நிரலிலுள்ள நேரொத்த பதிவில் காட்டப்பட்டுள்ள எல்லைகளின் வரையறைகளைக் கொண்டதுமான இப்பகுதியை அபிவிருத்திக்குப் பொருத்தமானதென அபிப்பிராயப்படுவதனால், அத்தகைய பகுதிகளை நகர அபிவிருத்திப் பகுதிகளாக இக்கட்டளை மூலம் பிரகடனப்படுத்துகின்றேன்.

**பிரசன்ன ரணதுங்க** (பா. உ.),
நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு,
12 ஆவது மாடி,
"செத்சிறிபாய", கட்டம்-II,
பத்தரமுல்லை,
2024, ஏப்பிறல் 09.

**அட்டவணை**

நாவலபிட்டிய நகர அபிவிருத்தி அதிகாரப் பிரதேசத்தினை விரிவுபடுத்தல்

*நிரல் I*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1980.08.04 ஆந் திகதிய மற்றும் இல. 100/ 4 இனைக் கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைவாக, நகர அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்திய கண்டி மாவட்டத்தின் நாவலபிட்டிய நகர அபிவிருத்தி அதிகாரப் பிரதேசத்திற்கு உரித்தாகும் இல. 1085, நாவலபிட்டிய கிழக்கு, இல. 1088, நாவலபிட்டிய மேற்கு, இல. 1087, நாவலபிட்டிய வடக்கு, இல. 1086, நாவலபிட்டிய தெற்கு, இல. 1105, வரக்காவ ஒரு பகுதி, இல. 1083, பவ்வாகமயின் ஒரு பகுதி, இல. 1084, இம்புல்பிட்டியவின் ஒரு பகுதி ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளுக்கு மேலாக, இல. 1107, கரஹதுன்கல, இல. 1097, கென்தோபிட்டிய, இல. 1104, பல்லேகம, இல. 1096, வெலிகம்பொல, இல. 1102, வெலிகொடவத்தை ஆகிய கிராம அலுவலர் பிரிவுகள் மற்றும் இல. 1105, வரக்காவ கிராம அலுவலர் பிரிவின் எங்சிய பகுதியும், இல. 1083, பவ்வாகம கிராம அலுவலர் பிரிவின் எஞ்சிய பகுதியும் உள்ளடங்கும் வகையில் உள்ளடக்கிய நிரல் II இல் குறிப்பிடப்பட்டுள்ள எல்லைகளை வரையறையாகக் கொண்டதுமான முழுப் பிரதேசத்தினையும் உள்ளடக்கும்.

*நிரல் II*

**வடக்கு:**

இல. 1102, வெலிகொடவத்தை கிராம அலுவலர் பிரிவின் மேற்கு எல்லை மற்றும் வடக்கு எல்லையினைச் சந்திக்கும் புள்ளியில் ஆரம்பித்து அந்தக் கிராம அலுவலர் பிரிவின் வடக்கு எல்லையினைச் சந்திக்கும் புள்ளிவரை. அந்த இடத்தில் இருந்து அந்த கிராம அலுவலர் பிரிவின் வடக்கு எல்லையின் ஊடாக கம்பொல-நாவலபிட்டிய வீதியை (AB13) குறுக்கு வெட்டிக்கொண்டு கிழக்குத் திசையை நோக்கிப் பயணித்து மகாவெலி கங்கையின் மத்திய கோட்டினைச் சந்திக்கும் புள்ளிவரை.

**கிழக்கு:**

கடைசியாகக் குறிப்பிட்ட புள்ளியிலிருந்து இலக்கம் 1104, பல்லேகம கிராம அலுவலர் பிரிவின் கிழக்கு எல்லையான மகாவலி கங்கையின் மத்திய கோட்டின் ஊடாக தெற்கு மற்றும் தென்மேற்குத் திசையை நோக்கிப் பயணித்து இல. 1105, வரக்காவ கிராம அலுவலர் பிரிவின் கிழக்கு எல்லையினைச் சந்திக்கும் புள்ளிவரை. அந்த இடத்தில் இருந்து அந்தக் கிராம அலுவலர் பிரிவின் வடக்கு எல்லையினைச் சந்திக்கும் புள்ளிவரை. அந்த இடத்தில் இருந்து அந்தக் கிராம அலுவலர் பிரிவின் கிழக்கு எல்லையான மகாவலி கங்கையின் மத்திய கோட்டின் ஊடாகத் தெற்குத் திசைக்கு நாவலபிட்டி-கொத்மலை வீதியினை (A506) குறுக்கு வெட்டிக்கொண்டு இல. 1084, இம்புல்பிட்டிய கிராம அலுவலர் பிரிவின் வடக்கு எல்லையில் இருக்கும் கடியல்லெனஓய மற்றும் மகாவலி கங்கையை ஒன்றையொன்று சந்திக்கும் புள்ளிவரை. அந்த இடத்தில் இருந்து அந்த கிராம அலுவலர் பிரிவின் மேற்கு எல்லையான மகாவலி கங்கையின் மத்திய கோட்டின் ஊடாக மீட்டர் 1.075 கள் தெற்கு திசைக்குப் பயணித்து அந்த இடத்தில் இருந்து கற்பனையான கோட்டின் ஊடாக கிழக்கு திசைக்குக் கங்கையைக் குறுக்குவெட்டி மகாவலி கங்கைக்குச் சமாந்தரமாகக் கிழக்குத் திசைக்கு அமைந்துள்ள ஒற்றையடிப் பாதையின் ஊடாக இல.

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

நாவலபிட்டிய நகர அபிவிருத்தி அதிகாரப் பிரதேசத்தினை விரிவுபடுத்தல்

*நிரல் I* *நிரல் II*

*1084, இம்புல்பிட்டிய கிராம அலுவலர் பிரிவின் ஊடாகப் பயணித்து இல. 1083 கொண்ட பவ்வாகம கிராம அலுவலர் பிரிவின் வடக்கு எல்லையான நாவலபிட்டிய-பத்தனை வீதி (B317) மத்திய கோட்டினைச் சந்திக்கும் புள்ளிவரை. அந்த இடத்தில் இருந்து நாவலபிட்டிய-பத்தனை வீதி (B317) மத்திய கோட்டின் ஊடாக அந்தக் கிராம அலுவலர் பிரிவின் கிழக்கு எல்லையினைச் சந்திக்கும் புள்ளிவரை. அந்த இடத்தில் இருந்து அந்த கிராம அலுவலர் பிரிவின் கிழக்கு எல்லையின் ஊடாக முறையாக தென்கிழக்கு, தென்மேற்கு, கிழக்கு மற்றும் மீண்டும் தென்கிழக்குத் திசையினை நோக்கிப் பயணித்து இல. 1099 கொண்ட இங்குறு ஓய வடக்கு கிராம அலுவலர் பிரிவின் வடக்கு எல்லையினைச் சந்திக்கும் புள்ளிவரை.*

**தெற்கு:**

*கடைசியாகக் குறிப்பிட்ட புள்ளியிலிருந்து இல. 1083, பவ்வாகம கிராம அலுவலர் பிரிவின் தெற்கு எல்லையின் ஊடாக தென்மேற்குத் திசையை நோக்கிப் பயணித்து அந்தக் கிராம அலுவலர் பிரிவின் கிழக்கு எல்லையினைச் சந்திக்கும் வரை. அந்த இடத்தில் இருந்து அந்த கிராம அலுவலர் பிரிவின் கிழக்கு எல்லையான மகாவலி கங்கையின் மத்திய கோட்டின் ஊடாக வடமேற்குத் திசையினை நோக்கி இல. 1097, கென்தோபிட்டிய கிராம அலுவலர் பிரிவின் தெற்கு எல்லையினைச் சந்திக்கும் புள்ளிவரை. அந்த இடத்தில் இருந்து அந்தக் கிராம அலுவலர் பிரிவின் தெற்கு எல்லையின் ஊடாக தென்மேற்குத் திசைக்கு இல. 1101, மபாகந்த வடக்கு கிராம அலுவலர் பிரிவின் வடக்கு எல்லையினைச் சந்திக்கும் புள்ளியினைக் கடந்து இல. 1094 கொண்டமைந்த தெகித கிராம அலுவலர் பிரிவின் கிழக்கு எல்லையினைச் சந்திக்கும் புள்ளிவரை.*

**மேற்கு:**

*கடைசியாகக் குறிப்பிட்ட புள்ளியிலிருந்து இல. 1097, கென்தோபிட்டிய கிராம அலுவலர் பிரிவின் மேற்கு எல்லையின் ஊடாகக் கிழக்குத் திசைக்கு இல. 1093, அளுத்கம கிராம அலுவலர் பிரிவின் கிழக்கு எல்லையினைச் சந்திக்கும் புள்ளியினைக் கடந்து பயணித்து இல. 1096, வெலிகம்பொல கிராம அலுவலர் பிரிவின் தெற்கு எல்லையினைச் சந்திக்கும் வரை. அந்த இடத்தில் இருந்து அந்தக் கிராம அலுவலர் பிரிவின் கிழக்கு எல்லையின் ஊடாக வடக்குத் திசையினை நோக்கி இல. 1107, கரஹதுன்கல கிராம அலுவலர் பிரிவின் மேற்கு எல்லையினைச் சந்திக்கும் புள்ளிவரை. அந்த இடத்தில் இருந்து அந்தக் கிராம அலுவலர் பிரிவின் மேற்கு எல்லையின் ஊடாக மற்றும் தொடர்ந்து கிழக்கு எல்லையான நாவலபிட்டிய-கினிகஸ்ஹேன (B319) வீதியின் மத்திய கோட்டின் ஊடாக இல. 1086, நாவலபிட்டிய தெற்கு கிராம அலுவலர் பிரிவின் கிழக்கு எல்லையினைச் சந்திக்கும் புள்ளிவரை. அந்த இடத்தில்*

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

நாவலபிட்டிய நகர அபிவிருத்தி அதிகாரப் பிரதேசத்தினை விரிவுபடுத்தல்

| *நிரல் I* | *நிரல் II* |
| --- | --- |
| | இருந்து அந்தக் கிராம அலுவலர் பிரிவின் மேற்கு எல்லையின் ஊடாக இல. 1102, வெலிகொட வத்தை கிராம அலுவலர் பிரிவின் தெற்கு எல்லையினைச் சந்திக்கும் புள்ளிவரை. இந்த இடத்தில் இருந்து அந்தக் கிராம அலுவலர் பிரிவின் மேற்கு எல்லையின் ஊடாக வடக்கு, கிழக்கு மற்றும் மீண்டும் வடக்குத் திசையனை நோக்கி ஆரம்ப புள்ளிவரை உள்ளடங்கும் முழுப் பிரதேசத்தினையும் கொண்டதாகும் |

EOG 04-0160

---

**1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டம்**

3 ஆம் பிரிவின் கீழான கட்டளை

திருத்தப்பட்டவாறான 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ், எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்டு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சராகிய பிரசன்ன ரணதுங்க ஆகிய நான், இதற்கான அட்டவணையின் I ஆம் நிரலில் குறித்துரைக்கப்பட்ட பகுதியையும் அத்தகைய அட்டவணையின் II ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவில் காட்டப்பட்டுள்ள எல்லைகளின் வரையறைகளைக் கொண்டதுமான இப்பகுதியை அபிவிருத்திக்குப் பொருத்தமானதென அபிப்பிராயப்படுவதனால், அத்தகைய பகுதிகளை நகர அபிவிருத்திப் பகுதிகளாக இக்கட்டளை மூலம் பிரகடனப்படுத்துகின்றேன்.

**பிரசன்ன ரணதுங்க** (பா. உ.),
நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு,
12 ஆவது மாடி,
“செத்சிறிபாய”, கட்டம்-II,
பத்தரமுல்லை,
2024, ஏப்பிறல் 04.

**அட்டவணை**

ஹட்டன் நகர அபிவிருத்தி அதிகாரப் பிரதேசத்தினை விரிவுபடுத்தல்

| *நிரல் I* | *நிரல் II* |
| --- | --- |
| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைவாக, நகர அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரப் பிரதேசமாக இல. 100/4 மற்றும் 1980.08.04 ஆந் திகதிய நுவரெலியா மாவட்டத்தின் ஹட்டன் நகரப் பிரதேசத்தின் ஒரு பகுதியாக அடங்கும் இல. 319B, ஹட்டன் வடக்கு கிராம அலுவலர் பிரிவும், இல. 319C, ஹட்டன் மேற்கு கிராம அலுவலர் பிரிவும், இல. 319D ஹட்டன் தெற்கு கிராம அலுவலர் பிரிவும், இல. 319 E, ஹட்டன் கிழக்கு கிராம | **வடக்கு:**<br><br>**இல. 320G, ருவன்புர கிராம அலுவலர் பிரிவின் தென்கிழக்கு எல்லை மற்றும் இல. 475A, குடாஓய கிராம அலுவலர் பிரிவின் தென்மேற்குத் திசையின் எல்லையில் சந்திக்கும் அவிசாவளை-ஹட்டன்-நுவரெலியா (A7) பிரதான வீதியின் மத்திய கோட்டில் ஆரம்பப் புள்ளியாகக் கொண்டு, அந்த** |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

ஹட்டன் நகர அபிவிருத்தி அதிகாரப் பிரதேசத்தினை விரிவுபடுத்தல்

*நிரல் I*

*அலுவலர் பிரிவின் எஞ்சிய பகுதி, இல. 319, திக்கோயா தெற்கு கிராம அலுவலர் பிரிவு மற்றும் இல. 319A, திக்கோயா கிராம அலுவலர் பிரிவுகளைவிட, இல. 318B, ஹட்டன் வழக்கு கிராம அலுவலர் பிரிவின் எஞ்சிய பகுதியும், இல. 319C, ஹட்டன் மேற்கு கிராம அலுவலர் பிரிவின் எஞ்சிய பகுதி, இல. 319D, ஹட்டன் தெற்கு கிராம அலுவலர் பிரிவின் எஞ்சிய பகுதி, இல. 319E, ஹட்டன் கிழக்கு கிராம அலுவலர் பிரிவின் எஞ்சிய பகுதி, இல. 319, திக்கோயா தெற்கு கிராம அலுவலர் பிரிவின் எஞ்சிய பகுதி, இல. 319A, திக்கோயா கிராம அலுவலர் பிரிவின் எஞ்சிய பகுதி, இல. 319H, நிவ்வேலிகம கிராம அலுவலர் பிரிவின் ஒரு பகுதி, இல. 320பு, ருவன்புர கிராம அலுவலர் பிரிவின் ஒரு பகுதி, இல. 319து, வனராஜா கிராம அலுவலர் பிரிவு மற்றும் இல. 320O, ஷெனன் கிராம அலுவலர் பிரிவு அடங்கிய எல்லைகளை வரையறையாகக் கொண்டதுமான முழுப் பிரதேசத்தினையும் உள்ளடக்கும்.*

*நிரல் II*

*இடத்தில் இருந்து இல. 320G, ருவன்புர கிராம அலுவலர் பிரிவின் தென்கிழக்கு எல்லையினை 319C, ஹட்டன் மேற்கு கிராம அலுவலர் பிரிவின் கிழக்கு எல்லையினைச் சந்திக்கும் புள்ளிவரை. அந்த இடத்தில் இருந்து 319C, ஹட்டன் மேற்கு கிராம அலுவலர் பிரிவின் கிழக்கு எல்லையின் ஊடாகத் தெற்குத் திசைக்கு 319B, ஹட்டன் வடக்கு கிராம அலுவலர் பிரிவின் வடக்கு எல்லையினைச் சந்திக்கும் புள்ளிவரை. அந்த இடத்தில் இருந்து 319B, ஹட்டன் கிழக்கு எல்லையின் ஊடாகத் தெற்குத் திசைக்கு 319J, என்பீல்ட் கிராம அலுவலர் பிரிவின் மேற்கு எல்லையினைச் சந்திக்கும் புள்ளிவரை.*

கிழக்கு:

*கடைசியாகக் குறிப்பிட்ட புள்ளியிலிருந்து 319J, என்பீல்ட் கிராம அலுவலர் பிரிவின் மேற்கு எல்லையின் ஊடாகத் தெற்குத் திசைக்குப் பயணிக்கும் எல்லை 319L, இன்ஜஸ்ட் கிராம அலுவலர் பிரிவின் கிழக்கு எல்லையினைச் சந்திக்கும் புள்ளிவரை. அந்த இடத்தில் இருந்து 319A, திக்ஓயா கிராம அலுவலர் பிரிவின் தென்மேற்கு எல்லையின் ஊடாக 319J, வனராஜா கிராம அலுவலர் பிரிவின் கிழக்கு எல்லை 319H, நிவ்வேலிகம கிராம அலுவலர் பிரிவின் வடக்கு எல்லையினைச் சந்திக்கும் புள்ளிவரை. அந்த இடத்தில் இருந்து சந்திக்கும் தியசிறிகம வீதியின் மத்திய கோட்டின் ஊடாக கிழக்கு, தெற்கு, மேற்கு திசையினை நோக்கிப் பயணித்து ஹட்டன்–மஸ்கெலியா டல் ஹவுஸ் (B 149) வீதியினை குறுக்குவெட்டும் புள்ளிவரை. அந்த இடத்தில் இருந்து காசல்ரி நீர்த்தேக்கத்தின் ஊடாக மேற்குத் திசைக்கு வரையப்படும் கோடானது 319H, நிவ்வேலிகம கிராம அலுவலர் பிரிவின் வடமேற்கு எல்லையினைச் சந்திக்கும் புள்ளிவரை.*

தெற்கு:

*கடைசியாகக் குறிப்பிட்ட புள்ளியிலிருந்து 319J கிராம அலுவலர் பிரிவின் மேற்கு எல்லையின் ஊடாக வடகிழக்குத் திசையினை நோக்கி 319E, ஹட்டன் கிழக்கு கிராம அலுவலர் பிரிவின் கிழக்கு எல்லையின் தெற்கு எல்லையினைச் சந்திக்கும் புள்ளிவரை. அந்த இடத்தில் இருந்து 319E, ஹட்டன் கிழக்கு கிராம அலுவலர் பிரிவின் மேற்கு எல்லையின் ஊடாக வடக்குத் திசைக்கு 319C, ஹட்டன் மேற்கு கிராம அலுவலர் பிரிவின் மேற்கு எல்லையினைச் சந்திக்கும் புள்ளிவரை.*

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

ஹட்டன் நகர அபிவிருத்தி அதிகாரப் பிரதேசத்தினை விரிவுபடுத்தல்

| *நிரல் I* | *நிரல் II* |
|---|---|
| | மேற்கு: |
| | கடைசியாகக் குறிப்பிட்ட புள்ளியிலிருந்து 320O ஷெனன் கிராம அலுவலர் பிரிவின் மேற்கு எல்லையின் ஊடாக வடக்குத் திசைக்குப் பயணிக்கும் எல்லை 320R, பென்மூர் கிராம அலுவலர் பிரிவின் மேற்கு எல்லையினைச் சந்திக்கும் புள்ளிவரை. அந்த இடத்தில் இருந்து 320R, பென்மூர் கிராம அலுவலர் பிரிவின் வடக்கு எல்லையின் ஊடாக, கிழக்குத் திசையினை நோக்கி 320E, ருவன்புர கிராம அலுவலர் பிரிவின் மேற்கு எல்லையினைச் சந்திக்கும் புள்ளிவரை. அந்த இடத்தில் இருந்து 320E, ருவன்புர கிராம அலுவலர் பிரிவின் மேற்கு எல்லையின் ஊடாக வடக்குத் திசையினை நோக்கிப் பயணிக்கும் எல்லை மற்றும் தெற்குத் திசைக்குச் செல்லும் சித்தர தோட்ட வீதியைச் சந்திக்கும் புள்ளிவரை. அந்த இடத்தில் இருந்து குறித்த சித்தர தோட்ட வீதி வழியாகப் பயணித்து ருவன்புர வீதியைச் சந்திக்கும் புள்ளிவரை. அந்த இடத்தில் இருந்து ருவன்புர வீதியின் இலக்கம் 320G, ருவன்புர கிராம அலுவலர் பிரிவின் கிழக்கு எல்லையினைச் சந்திக்கும் புள்ளிவரை. அந்த இடத்தில் இருந்து இலக்கம் 320G, ருவன்புர கிராம அலுவலர் பிரிவின் கிழக்கு எல்லையின் வழியாகத் தெற்குத் திசையினை நோக்கி ஆரம்பப் புள்ளியினைச் சந்திக்கும் இடம்வரை ஆகும். |

EOG 04-0161

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.